# தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
## Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.ch trfswiss@gmail.com

**8 வயதுப்பிரிவு**
(01.01.2010 – 31.12.2010 வரையில் பிறந்தோர்)

# தமிழீழத்தின் வழிகாட்டிகள்

தமிழ் இனம் சுதந்திரமாக வாழ, தமிழீழம் மீட்க விடுதலைப் போர் தொடுத்தவர் எங்கள் தலைவர் மாமா. அவர் காட்டிய பாதையில் நடந்தவர்கள் எங்கள் மான மறவர்கள்.

அஞ்சாத நெஞ்சமும், பணியாத வீரமும் கொண்டவர்கள் அவர்கள். தங்கள் உயிரால் தமிழீழத்தை நிறைத்தவர்கள். முதல் மாவீரன் வீரவேங்கை சங்கர் மாமா ஈந்த, உயிர் ஈகம் எங்கள் நாட்டைச் செதுக்கிய வலிமை மிகு உளியாகியது.

எதிரியைத் தகர்க்கக் கந்தகக் காற்றாய் வெடித்துச் சிதறியவர் கரும்புலி கப்டன் மில்லர் மாமா. அவருடைய உயிர்த் தியாகம் கரும்புலிகள் வீரத்திற்கு வித்தாகி நின்றது.

தமிழீழப் பெண் இனத்திற்கு விடுதலை வேட்கையை ஊட்டி களப்பலியானார் முதற்பெண் மாவீரர் 2ஆம் லெப்டினன் மாலதி அக்கா. அவர் வழியில் கடலிலே காவியம் படைத்து விடுதலைக்கு வித்தாகினார் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி அக்கா.

அறப் போரின் உச்சமாகத் தன்னுயிரைத் துச்சமென மதித்து அகிம்சை வழிப் போராட்டத்தில் அணுஅணுவாய் உருகி உருகி ஆகுதியானவர் தியாகதீபம் திலீபன் மாமா.

தலைவர் மாமாவின் பெரும் கனவாகிய தமிழீழத்தின் வான்படையைக் கட்டியமைக்க கடைசி மூச்சுவரை அயராது உழைத்து உயிர் நீத்தவர் கேணல் சங்கர் மாமா. அவர் கனவை நனவாக்கி, தமிழரின் வீரத்தை நிலைநாட்டி, வான்கரும்புலிகளாகத் தம்மை இனங்காட்டி கேணல் ரூபன் மாமாவும், லெப்டினன் கேணல் சிரித்திரன் மாமாவும் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

இவர்களைப் போன்று தமிழீழ விடுதலையை நேசித்து, தலைவர் மாமாவின் வழிகாட்டலை ஏற்று தங்கள் இன்னுயிர்களை ஈகம் செய்த மாவீரர்கள் அனைவரும் தமிழீழத்தின் வழிகாட்டிகளே!

நாங்கள் வாழ்கின்ற காலம் எல்லாம் அவர்கள் தியாகத்தைப் போற்றுவோம். எம் தமிழீழ தேசத்தை மீட்டு, அவர்களுக்குக் காணிக்கை ஆக்குவோம்.

நன்றி,

வணக்கம்.